DEPOSITION OF WITNESS

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II, PONNERI

Case No. : D. V. C. No. 6/2024

Prosecution Witness : P. W. 1

| | | | |
|---|---|---|---|
| Name | : சோனியா | | : |
| Father / Husband Name | : | | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Oaths Act 1969 (Central Act 44 of 1969) on the day of 07/02/2026

R2 Present. R1, R3 absent.

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி (எதிர்மனுதாரர் தரப்பில்)**

மசா.ஆ.1 புகார் கையால் எழுதப்பட்டு ஒளிநகல் தான் தாக்கலாகி உள்ளது என்றால், சரிதான். அதில் உண்மை நகல் என்று எதுவும் சான்றிடப்படவில்லை என்றால், சரிதான். இதை தான் நான் காவல் நிலையத்தில் கொடுத்தேன் என்ற ஆதாரம் இல்லை என்றால், சிஎஸ்ஆர் அதற்கு தான் கொடுத்தார்கள். இந்த புகாருக்கு தான் சிஎஸ்ஆர் கொடுத்தார்கள் என்று சொல்வதற்கு ஆதாரம் எதுவும் இல்லையென்றால், சரியல்ல. மசா.ஆ.2 சிஎஸ்ஆர் ல் நானும் எதிர்மனுதாரரும் பிரிந்து வாழ கருத்து வேறுபாடு காரணமாக என்று உள்ளது என்றால், சரிதான். 03.04.2022 ல் சோழவரம் காவல் நிலையத்தில் புகார் கொடுத்து, அது உண்மை இல்லை என்று முடித்து வைக்கப்பட்ட நிலையில், 07.04.2022 ல் நான் புதிய சங்கதிகளை சேர்த்து அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் புதிய புகார் கொடுத்திருக்கிறேன் என்றால் சரியல்ல. சோழவரம் காவல் நிலையத்தில் கொடுத்த புகாரில் இல்லாத விவரங்களை நான்

SHANKARAN MANJULA Digitally signed by SHANKARAN MANJULA

07.04.2022ல் கொடுத்த புகாரில் சேர்த்திருக்கிறேன் என்றால், சரிதான். மசா.ஆ.3 07.04.2022ல் கொடுத்த புகாரும் நான் கைப்பட எழுதி கொடுத்த ஒளிநகல் தான் தாக்கல் செய்திருக்கிறேன் என்றால், சரிதான். இதை தான் நான் காவல் நிலையத்தில் கொடுத்தேன் என்ற ஆதாரம் இல்லை என்றால், சரிதான்.

மசா.ஆ.4 செங்குன்றம் காவல் உதவி ஆணையரிடம் கொடுத்த புகாரின் ஒளிநகல் தான் தாக்கல் செய்திருக்கிறேன் என்றால், சரிதான். இதை தான் நான் காவல் நிலையத்தில் கொடுத்தேன் என்ற ஆதாரம் இல்லை என்றால், சரிதான். பலராமன் தாத்தா வீட்டில் நடந்த பஞ்சாயத்திலேயே திருமணத்தில் விருப்பம் இல்லை என்று சொல்லியிருக்கிறேன் என்றாலும், என் தாயார் கட்டாயப்படுத்தியதால் தான் திருமணத்திற்கு ஒப்புக் கொண்டேன் என்றாலும், சரியல்ல. அந்த பஞ்சாயத்தில் கலந்து கொண்ட நபர்களை கேட்டால் நான் சொன்ன விவரம் தெரிய வரும் என்றால், சரிதான். பிரமாணத்தில் திருமண சமயத்தில் பணம் இல்லை என்பதால், நிலத்தை விற்று தான் ஏற்பாடு செய்திருந்தேன் என்றால், சரிதான். எந்த நிலத்தை யாரிடம் விற்று ஏற்பாடு செய்தோம் என்றால், அக்கா ரேவதியிடம் தான் அந்த நிலத்தை எடுத்துக்க சொல்லி காசை அவரிடம் இருந்து தான் பெற்றோம். யார் பெயரில் அந்த நிலம் இருந்தது என்றால், அப்பா பெயரில் இருந்தது. தற்போதும் அப்பா பெயரில் தான் உள்ளது என்றாலும், அவர் உயிருடன் இல்லை என்றாலும் சரிதான். எங்கு உள்ளது என்றால், உப்பரப்பாளையத்தில் சென்ட் எவ்வளவு என்றால், 15 சென்ட் இருக்கும். அதுகுறித்த ஆவணம் என்னால் தாக்கல் செய்ய இயலுமா என்றால், இயலும். 10ம் வகுப்பு தேர்வு முடிந்து 15 நாட்கள் நான் எதிர்மனுதாரர்கள் வீட்டில் தங்கிய போது யாரெல்லாம் உடனிருந்தார் என்றால், ஞாபகமில்லை. 1ம் எதிர்மனுதாரர் சரிவர காது கேளாதவர்

SHANKARAN MANJULA
Digitally signed by SHANKARAN MANJULA

என்பதால், வேலையில்லாமல் இருந்தார் என்றால், சரிதான். திருமணத்திற்கு பின்பு தாம்பத்திற்கு பிறகும் குழந்தை இல்லாததற்காக சிகிச்சை பெற்றதற்கு எந்தெந்த மருத்துவமனைக்கு சென்றோம் என்றால், திருநின்றவூர் ராஜேஸ்வரி மருத்துவமனை மற்றும் அம்பத்தூர் ஸ்டெட்போர்டு மருத்துவமனைக்கு சென்றாம். என் தாயார் 1ம் எதிர்மனுதாரருக்கு 2 சவரன் நகை வாங்கி கொடுத்ததாக சொல்லியிருக்கிறேன். பிரமாணத்தில் என்ன வகை நகை அது என்று சொல்லவில்லை என்றால், சரிதான். அது வாங்கியதற்கான ரசீது தாக்கல் செய்யவில்லை என்றால், சரிதான். திருமணத்தின் போது எனக்கும் மாப்பிள்ளைக்கும் போட்ட நகைகளில் என்னென்ன வகை நகைகள் போட்டார்கள் என்று பிரமாணத்தில் விவரமாக சொல்லவில்லை என்றால், சரிதான். 47 சவரன் நகைகள் விவரங்கள் என்னவென்றால், தாலி செயின் – 5 சவரன், 2 நெக்லஸும் தலா 5 சவரன், பெரிய ஆரம் – 10 சவரன், வளையல் – 5 சவரன், ஜடையில் வைக்கும் தங்க ஆபரணம் – 3/4 சவரன், கம்மல் – 3/4 சவரன், மற்றொரு கம்மல் – 1 3/4 சவரன், 2 கம்மல்கள் – தலா 1/2 சவரன்கள், சின்ன கம்மல் – 1/4 சவரன், 5 மோதிரங்கள் மொத்தம் – 1 1/4 சவரன், மாட்டில் – 1 சவரன், மாப்பிள்ளைக்கு போட்டதில் செயின் – 4 சவரன், மோதிரம் – 1/2 சவரன், பிரேஸ்லட் – 2 சவரன், டாலர் செயின் – 1/2 சவரன் ஆகும். மேற்படி நகைகள் திருமணத்தின் போது போட்டதாக எந்த ஆதாரமும் தாக்கல் செய்யவில்லை என்றால், ரசீதுகள் மட்டும் உள்ளது. நான் தாக்கல் செய்த ரசீதுகள் 47 சவரனுக்கு கொடுக்கவில்லை என்றால், புது நகைகளான 30 சவரனுக்கு மட்டும் கொடுத்திருக்கிறேன். திருமணத்தின் போது கொடுத்த வெள்ளி பொருட்களுக்கு என்னால் கணக்கு காட்ட முடியாது என்றால், சரியல்ல. என்ன வெள்ளி பொருட்கள் என்றால், பெரிய குத்துவிளக்கு – 2, சின்ன குத்துவிளக்கு – 2, காமாட்சி விளக்கு – 1, சின்ன தட்டு – 2, பெரிய தாம்பூல தட்டு – 1, பஞ்ச பாத்திரங்கள்

SHANKARAN MANJULA Digitally signed by SHANKARAN MANJULA

செட், எனக்கு போட்ட கொலுசு ஆகும். மற்றவை எனக்கு ஞாபகமில்லை. வெள்ளி பொருட்களுக்கும் நான் ரசீதுகள் தாக்கல் செய்யவில்லை என்றால், கொலுசுக்கு மட்டும் ரசீது கொடுக்கவில்லை. மற்றவைக்கு கொடுத்திருக்கிறேன். வீட்டு உபயோக பொருட்கள் என்னென்ன என்று குறிப்பிட்டு பிரமாணத்தில் சொல்லவில்லை என்றால், சரிதான். கட்டில், பீரோ, வாஷிங் மிசின், பித்தளை மற்றும் ஸ்டெயின்லெஸ் ஸ்டீல் பாத்திரங்கள் கொடுத்தார்கள். மேற்படி பொருட்களை நான் திருமணத்தின் போது எனக்கு போட்டதாகவும், எதிர்மனுதாரர் வீட்டிற்கு அதனை எடுத்து சென்றதற்கான எந்த புகைப்படமும் நான் தாக்கல் செய்யவில்லை என்றால், சரிதான்.

மறுவீடு சமயத்தில் மேற்படி பொருட்களை அடுக்கி வைத்திருக்கும் புகைப்படம் கூட நான் தாக்கல் செய்யவில்லை என்றால், சரிதான். மசா.ஆ.8 ரசீதுகளில் எதிலும் பில் நம்பர் குறிப்பிடவில்லை என்றால், சரிதான். மசா.ஆ.8 ரசீதுகள் அல்ல, வெறும் எஸ்டிமேட் செய்யப்பட்டிருக்கிற கடையில் கொடுக்கிற வழக்கமான ஒரு தாள் என்றால், சரியல்ல. தாலி செயின் 5 சவரன் என்று நான் சொல்வது தாலி மாற்றும் சடங்கில் தான் போடுவார்கள் என்றால், சரியல்ல. முன்னரே போட்டுவிட்டார்கள். எப்போது போட்டார்கள் என்றால், திருமணம் முடிந்து ஒரு மாதம் கழித்து போட்டார்கள். கொரோனா காலம் என்பதால், என்னுடைய அக்கா ரேவதி அந்த சமயம் தன் கணவருடன் ஆந்திராவில் வசித்தார்கள் என்றால், சரிதான். 01.10.2021ல் கடைசியாக நான் பார்வதி மருத்துவமனையிலிருந்து என் தாயார் வீட்டிற்கு செல்லும் போது அந்த தாலி செயினை அணிந்து தான் சென்றேன் என்றால், சரிதான். என் தாயார் சுலோச்சனா 1ம் எதிர்மனுதாரரின் தாய்மாமா பாபு அவர்களிடம் நகைகள் அனைத்தும் மனுதாரரின் வசம் தான் உள்ளது என்று கூறிய உரையாடல் குறித்த பதிவுகள் ஆவடி போலிஸ்

SHANKARAN MANJULA Digitally signed by SHANKARAN MANJULA

நிலையத்தில் விசாரணையின் போது , போலிசாருக்கு போட்டுக் காண்பிக்கப்பட்டது என்றால், எனக்கு தெரியாது. போலிசார் மேற்படி உரையாடல் பதிவுகளை நீதிமன்றத்தில் சமர்ப்பித்து எதிர்மனுதாரர் வசம் நகைகள் இல்லை என்று நிரூபித்து கொள்ளுமாறு சொன்னார்கள் என்றால், தெரியாது. நான் சொல்வது பொய் என்றாலும், மேற்படி ஆவடி காவல் நிலையத்தில் நடந்த விவரங்கள் தெரியும் என்றாலும் சரியல்ல. என்னுடைய தந்தை நினைவு தினத்திற்கு சென்றுவிட்டு மீண்டும் எதிர்மனுதாரர் வீட்டிற்கு வந்த போது, 2ம் எதிர்மனுதாரர் உடல்நலக்குறைவால் படுத்திருந்து மதியம் எழுந்து தான் எனக்கு சாப்பாடு செய்து கொடுத்தார் என்றால், சரியல்ல. நான் தூக்க மாத்திரைகள் சாப்பிட்டதாக சொல்லும் விவரங்கள் அனைத்தும் பாபு சொல்லி தான் 2ம் எதிர்மனுதாரருக்கு தெரியும் என்றால், எனக்கு தெரியாது. பாபுவுக்கு மேற்படி விவரம் எப்படி தெரியும் என்பது எனக்கு தெரியுமா என்றால், தெரியாது. நான் மேற்படி தூக்க மாத்திரை சாப்பிட்ட விவரத்தை யாரிடம் சொன்னேன் என்றால், என் அக்கா ரேவதியிடம் சொன்னதாக ஞாபகம். எத்தனை மணிக்கு 1, 2 எதிர்மனுதாரர்கள் என்னை மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றார்கள் என்றால், நேரம் தெரியவில்லை. இரவா, பகலா என்று தெரியவில்லை. அதன் பின்னர் தான் இரவில் அனுமதித்தார்கள் என்று தெரிந்து கொண்டேன். வீட்டிலிருந்து மருத்துவமனைக்கு காரில் செல்ல நடந்து சென்று தான் காரில் ஏறினேன் என்றால், சரியல்ல. காரிலிருந்து மருத்துவமனைக்கு நடந்து போனேனா என்றால், என்னை காரிலிருந்து தள்ளிவிட்டார்கள். நான் சொல்வது தவறு என்றால், சரியல்ல. நான் தூக்க மாத்திரை உட்கொள்ளவில்லை என்று நான் மருத்துவரிடம் சொன்னேனா அல்லது மருத்துவர் எதிர்மனுதாரரிடம் சொன்னாரா என்றால், தெரியவில்லை. மருத்துவமனையிலிருந்து சித்தப்பா வீட்டிற்கு சென்ற பின்பு நான் கணவருடன் சேர்ந்து வாழவில்லை என்றால், சரிதான். 11.02.2022ல் மீண்டும்

SHANKARAN MANJULA Digitally signed by SHANKARAN MANJULA

அவருடன் சேர்ந்து வாழ பஞ்சாயத்து பேசப்பட்டு நான் குழந்தை பேறுக்காக வடபழனி சிம்ஸ் மருத்துவமனைக்கு சென்றேனா என்றால், குழந்தை பேறுக்காக செல்லவில்லை. பொதுவாக சென்றோம். கவுன்சிலிங் கொடுத்தார்களா என்றால், ஞாபகமில்லை. பலராமன் தாத்தா வீட்டில் நடந்த பஞ்சாயத்திற்கு பின்பு தான் நான் எதிர்மனுதாரர் மீது புகார் கொடுத்தேன் என்றால் சரிதான். வழக்கில் சொல்லியுள்ள சீதன பொருட்கள் எதனையும் நான் எடுத்து செல்லாமலேயே பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல. நான் தனியார் நிறுவனத்தில் மாதம் ரூ.30,000/- சம்பாதிக்கிறேன் என்றால், சரியல்ல. எம்எஸ்சி படித்துள்ளேன் என்றால், சரிதான். எதிர்மனுதாரருடன் நான் திருமணம் செய்து சில நாட்கள் மட்டுமே குடும்ப வாழ்க்கை நடத்தி அவரது வாழ்க்கையை நாசம் செய்த நிலையில், நான் கோரியுள்ள இழப்பீடு மற்றும் பரிகாரம் கிடைக்கத்தக்கதல்ல என்றால், சரியல்ல.

திருமண சமயத்தில் எதிர்மனுதாரர் வீட்டில் எனக்கு போட்ட 5 சவரன் நகை மற்றும் புடவைக்காக கொடுத்த ரூ.50,000/- நானே வைத்திருக்கிறேன் என்றால், சரியல்ல. பொய்யான சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல. ரத்னா என்பவர் என்ன உறவு என்றால், என் அக்கா மாமியார் ஆவார். பரந்தாமனுக்கும் ரத்னாவிற்கும் என்ன உறவுமுறை என்றால், தாய் மகன் ஆவர். மேற்கூறியவர்கள் பலராமன் வீட்டில் நடந்த பஞ்சாயத்தில் கலந்து கொண்டார்களா என்றால், ரத்னா வரவில்லை. பரந்தாமன் வந்தார். ரத்னா சூலூர்பேட்டையில் வசிக்கிறார் என்றால், சரியல்ல. அனுராதா மருத்துவமனை சூலூர்பேட்டையில் உள்ளது என்றால், தெரியாது. ஆந்திராவில் உள்ளது. அங்கு நான் சிகிச்சைக்கு சென்றேனா என்றால், சென்றேன். என்னுடைய உடலில் குறைபாடுகளுடன் இருந்த நிலையில் எனது தாயாரின் விருப்பத்தின் பேரில்

SHANKARAN MANJULA Digitally signed by SHANKARAN MANJULA

முதல் எதிர்மனுதாரரை திருமணம் செய்து கொண்டு, திருமண வாழ்க்கையில் விருப்பம் இல்லாமல் எதிர்மனுதாரர்கள் மீது பொய்யான குற்றச்சாட்டுகளை எந்த முகாந்திரமும் இல்லாமல் இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால், சரியல்ல. திருநின்றவூர் ஏஜி மருத்துவமனையில் எதிர்மனுதாரர்களால் எனக்கு மருத்துவம் பார்க்கப்பட்டதா என்றால், போனேன். நான் சொல்லியவாறு எந்த குடும்ப வன்முறையிலும் எதிர்மனுதாரர்கள் ஈடுபடவில்லை என்றால், சரியல்ல. அவர்களை பழி வாங்கவே இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால், சரியல்ல.

SHANKARAN MANJULA Digitally signed by SHANKARAN MANJULA